**வெலிகேபொல பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

-----------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

---------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 28 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 08 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 யூலை 14 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வெலிகேபொல பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

--------------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் ரூபா 27,697 தொகையான வழங்கப்பட்ட கழிவு நிதிக்கூற்றுக்களில் செலவினமாக கணக்கீடு செய்யப்படாமல் திரண்ட நிதியத்தில் சீராக்கப்பட்டமையால் செயற்பாட்டுச் செலவினம் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வேலை பூர்த்தி செய்யப்பட்ட 06 வேலைகளுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 3,016,546 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் சாட்டப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 54,000 தொகையான ஏணியொன்று ரூபா 5,400 என கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக தளபாடம் மற்றும் பொருத்துக்கள் ரூபா 48,600 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டில் 02 சந்தர்ப்பங்களின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 32,100 தொகையான 12 பாதணிச் சோடிகள் நிலையான சொத்தாக தளபாடம் மற்றும் பொருத்திகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் அந்த அளவினால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கடன் காலக்கழிவுப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 20,950,164 ஆக இருந்த போதிலும், அது ரூபா 20,697,825 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ரூபா 252,339 தொக அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 4,475,734 தொகையான கடன்கொடுத்தோர் மீதி, பட்டோலையின் பிரகாரம் ரூபா 5,207,442 ஆனமையால் ரூபா 731,708 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்

கடன்கொடுத்தோர் பதிவேட்டின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 8,389,536 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 4,453,284 கூட்டுத்தொகையான மீதியை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

1988 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,423,549 தொகையான முற்பணம் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371(2) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,924,307 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,188,432 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 2,735,875 தொகையான அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவுகள் ரூபா 2,735,875 இனால் அதிகரித்தமை தொடர்பில் 03 வருமான விடயங்களில் ரூபா 5,377,106 அதிகரிப்பும், 01 செலவின விடயத்தில் ரூபா 1,409,154 குறைவடைந்தமையும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | பாதீடு செய்யப்பட்ட | உள்ள படியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 4,248 | 8,365 | 5,615 |
| வாடகை | 2,716 | 2,071 | 259 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 932 | 1,131 | - |
| ஏனைய வருமானம் | 58,685 | 34,783 | 6,109 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

---

மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் சேவைகளுக்கான கட்டணம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவைவிட முறையே 66 சதவீதம், 27 சதவீதம் மற்றும் 46 சதவீதம் என அதிகரித்திருந்ததுடன் வாடகை வருமானம், பிடியாணைக் கட்டணமும் தண்டப் பணமும் மற்றும் ஏனைய வருமானம் என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவைவிட முறையே 31 சதவீதம், 65 சதவீதம் மற்றும் 42 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 2.3.3 ஆதனவரி

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 2016 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு காணப்பட்ட ஆதனவரி அலகுகளின் எண்ணிக்கை 1,683 இலிருந்து ரூபா 3,117,235 தொகையான நிலுவை ஆதனவரி 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு தவறியிருந்தது.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனவரி அறவிடப்படுகின்ற பிரதேசங்களை விரிவுபடுத்துவதன் கீழ் ஒபநாயக்க மற்றும் வெலிகேபொல நகரங்களுக்கு அண்மித்த பிரதேசங்களை அபிவிருத்தியடைந்த கிராமப் பிரதேசங்களாக அறிவித்து புதிய ஆதனவரி மதிப்பீட்டின் பிரகாரம் 2014 சனவரி 01 ஆந் திகதி முதல் ஆதனவரி பதிவேடுகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த பிரதேசங்களுக்காக போதியளவான வசதிகளை வழங்காமல் ஆதனவரி அறவிடுவது தொடர்பாக பிரதேச வாசிகளிடமிருந்து ஏற்பட்டிருந்த எதிர்ப்பின் காரணமாக, சபையின் மாதாந்த பொதுக் கூட்டத் தீர்மானத்தின் மூலம் ஆதனவரி அறவிடல் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக பதிவேடுகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அறவிடுவதற்கு முடியாதிருந்த ரூபா 3,070,656 தொகையான ஆதனவரி மீதியை பதிவழிப்பதற்காக 2016 யூலை 27 ஆந் திகதி அமைச்சரின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிப்பதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2017 மே 31 ஆந் திகதி வரையிலும் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

---------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உள்ளூராட்சி ஆணையாளரின் 2009 மார்ச் 09 ஆந் திகதிய 2009/01 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்ட வாடகை திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், சுற்றறிக்கை ஆலோசனையின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், முதலாவது தடவையாக அறவிடப்பட்ட வாடகை தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கான சபைத் தீர்மானம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

(ஆ) ஒபநாயக்க சந்தைக்கு முன்பக்கம் இலக்கம் 01 முதல் 08 வரையான கடைகள் 1996 ஆம் ஆண்டின் போது ரூபா 300 வீதம் மாதாந்த வாடகையில் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2007 ஆம் ஆண்டின் போது ரூபா 600 வரை வாடகை அதிகரிக்கப்பட்டிருந்தது. எனினும், திருத்தப்பட்ட வாடகையை உள்ளடக்கி புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்குச் சொந்தமான 02 வாராந்த சந்தைகளிலிருந்தும் 02 மீன் தட்டிகளிலிருந்தும் 2016 ஆம் ஆண்டிற்குரிய நிலுவை வாடகை ரூபா 100,281 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும், அந்த நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஈ) 2016 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு 89 அலகுகளிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 63,551 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்படுகின்ற 74 அலகுகளிலிருந்து அறவிடவேண்டிய ரூபா 60,492 அதாவது மொத்த நிலுவைப் பெறுமதியில் 95 சதவீதத்தை உள்ளடக்கியிருந்தது.

### 2.3.5 ஏனைய வருமானம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் அமுல்படுத்தப்படுகின்ற 05 நீர் செயற்திட்டங்களில் 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2016 யூலை 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக கிடைக்க வேண்டியிருந்த ரூபா 498,489 கூட்டுதொகையான நிலுவை நீர் வரி மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான கலிபவுசர் மூலம் எந்த வருமானமும் உழைக்கப்படாதிருந்ததுடன் கழிவுப்பொருட்களை எடுத்துச் சென்று புதைப்பதற்கான இடமொன்று இன்மையினால் கலிபவுசரை வாடகைக்கு வழங்குவதற்கான இயலுமை காணப்படவில்லை என கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபை அதிகாரப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்களின் உயரத்தின் பிரகாரம் அறவிடவேண்டிய கட்டணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

---

2016 ஏப்ரல் முதல் 2016 ஒக்தோபர் வரையான காலப்பகுதியில் எம்பிலிப்பிட்டிய நீதவான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத்தை இனங்கண்டு அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2016 ஏப்ரல் முதல் 2016 ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்குரிய பலாங்கொடை நீதவான் நீதிமன்றத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்த ரூபா 448,299 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் 2016 ஒக்தோபர் 20 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டின் பிரகாரம் 05 அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக ரூபா 37,100,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையில் அதில் எந்தவொரு வேலையேனும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், மாகாண சபை நிதிஏற்பாட்டின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 7,677,615 பெறுமதியான 20 அபிவிருத்தி செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சப்ரகமுவ மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களத்தால் மீளாய்வாண்டிற்காக விநியோகிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு அறிக்கையின் படி 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த 35 கொடிக்கம்பங்களின் பற்றாக்குறை தொடர்பாக 2016 நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் மூலம் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்ட ரூபா 53,328 கூட்டுத்தொகையான இயந்திரங்களையும் உபகரணங்களையும் மற்றும் தளபாடமும் பொருத்திகளையும் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மரணமடைந்த, ஓய்வுபெற்றுச் சென்ற, பணியிடமாற்றம் கிடைத்தமை மற்றும் வேலையை விட்டுச் சென்றமை போன்ற காரணங்களின் அடிப்படையில் 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 106,257 கூட்டுத் தொகையான கடன் மீதி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.3 கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(ix)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவுகளை அகற்றுதல் மற்றும் அதற்கான கட்டணங்களை அறவிடல், உப விதிகளுக்குரிய விடயத்திற்கான காரணமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் கழிவுப்பொருள் அகற்றுதல் தொடர்பாக உப விதியொன்று விதிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) பகுதியின் 9.4 ஆவது உப விதியின் பிரகாரம் வறுமையின் காரணமாக சபையினால் விடுவிப்புச் செய்யப்பட்ட வசிப்பாளர் அல்லாத, கழிவுப்பொருட்களை அகற்றும் சேவை மூலம் சேவை வழங்கப்படுகின்ற எந்தவொரு இடத்திலும் வாழ்கின்றவர்களினால் சபையினால் நிர்ணயிக்கப்படுகின்ற கழிவுப்பொருள் அகற்றும் கட்டணமொன்று சபைக்கு மாதாந்தம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபையினால் கழிவுப்பொருள் அகற்றும் சேவைக்கான கட்டணம் அறவிடுவதற்கு முறையான திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் நகரத்தில் சேகரிக்கப்படுகின்ற கழிவுப் பொருட்களை வகைப்படுத்தாமல் கஹவத்த பெருந்தோட்டக் கம்பனிக்குச் சொந்தமான திறந்த காணியொன்றில் அகற்றப்பட்டு சில காலத்திற்குப் பின்னர் கழிவுப்பொருட்களுக்கு மேல் மண்படையொன்று இடுதல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததாக சபையினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

------------------------------------------------------------------

**4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்**

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

**4.2 தீர்வு காணப்படாத மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பிடக்கூடிய பெறுமதி ரூபா 7,870,368 தொகையான 03 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) கணக்கீடு | (i) | வகைப்படுத்தல் வழுக்கள் காணப்பட்டமை. |
| | (ii) | கணக்குகளில் இருந்து கைவிடப்பட்டிருந்தமை |
| | (iii) | ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமை |
| | (iv) | குறைத்துப் பதிவு செய்யப்பட்டமை. |
| (ஆ) வருமான நிர்வாகம் | | நிர்ணயிக்கப்பட்ட வருமானம் அறவிடப்படாமை. |
| (இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | முறையான வகையில் அகற்றப்படாமை |